Department of Education, Sabaragamuwa Province/ Weekly School



**அலகு : - மதிப்பிடலும் மட்டந்தட்டலும்**

**பாடவேளைகளின் எண்ணிக்கை : 08**

- பாடப்புத்தகத்தில் 83, 84 ஆம் பக்கங்களை நன்றாக விளங்கிக் கொள்க.
- எண்ணிப் பார்க்காமல் அனுமானித்துக் கிட்டிய பெறுமானத்தைப் பெறும் சந்தர்ப்பங்கள் 5 எழுதுக.

உதா : வாழைக்குளை ஒன்றிலுள்ள காய்களின் எண்ணிக்கையைக் கூறுதல்.

**தொகுதி ஒன்றிலுள்ள பொருள்கள் அனைத்தையும் எண்ணாது அவற்றின் எண்ணிக்கையை அண்ணளவாக கூறுதல் மதிப்பிடல் எனப்படும்.**

- பாடப்புத்தகத்தில் 84, 85 ஆம் பக்கங்களிலுள்ள உதாரணம் 1, உதாரணம் 2 என்பவற்றை விளங்கிக் கொள்க.

1. பாத்திரம் A யிலுள்ள நீரின் கனவளவு 200 ml ஆகும். பாத்திரத்தில் கொள்ளும் நீரின் கனவளவை மதிப்பிடுக.




A

2. வாழைக்குளை ஒன்றிலுள்ள சீப்புகளின் எண்ணிக்கை 7 ஆகும். சீப்பு ஒன்றிலுள்ள காய்களின் எண்ணிக்கை 15 ஆகும். வாழைக்குளையிலுள்ள காய்களின் மொத்த எண்ணிக்கையை மதிப்பிடுக.

- பாடப்புத்தகத்தில் 86, 87 ஆம் பக்கங்களிலுள்ள பயிற்சி 6.1 இற்கு விடையளிக்க.
- எண் ஒன்றை கிட்டிய 10 இல் எழுதுவதற்காகப் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறையை எழுதுக.

**ஒரு முழுவெண்ணை அதற்குக் கிட்டிய பத்தின் மடங்கில் எழுதுவதை கிட்டிய பத்தின் மடங்கிற்கு மட்டந்தட்டல் எனப்படும்.**

1) கீழுள்ள எண் கோட்டைக் கவனமாக அவதானிக்கவும். அதிலிருந்து வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.




A, B, C, D, E, F, G, H, I என்பவற்றினால் வகைகுறிக்கப்படும் எண்களை எழுதுக.

ஓவ்வொரு எண்ணையும் அதற்கு அண்மித்துள்ள பத்தின் மடங்கிற்குரிய கூட்டினுள் எழுதவும்.

| 10 | 20 | 30 | 40 |
|---|---|---|---|
| | | | |

**பத்தின் மடங்குகள் இரண்டிற்குச் சரி நடுவில் அமைந்துள்ள எண் கூடிய பத்தின் மடங்கிற்கு மட்டந்தட்டப்படும்.**

உதா :- 45 ⟶ 50

65 ⟶ 70

115 ⟶ 120

975 ⟶ 980

**எண் ஒன்றில் ஒன்றினிடத்து இலக்கம் 1, 2, 3, 4 எனின் அவ்வெண்ணிலும் குறைந்த கிட்டிய பத்தின் மடங்கிற்கும், ஒன்றினிடத்து இலக்கம் 5, 6, 7, 8, 9 எனின் அவ்வெண்ணிலும் கூடிய கிட்டிய பத்தின் மடங்கிற்கும் மட்டந்தட்டப்படும்.**

உதா :- 43 ⟶ 40

54 ⟶ 50

56 ⟶ 60

98 ⟶ 100

113 ⟶ 110

கீழுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| **எண்** | **கிட்டிய 10 இற்கு மட்டந்தட்டும் போது** |
|---|---|
| 15 | 20 |
| 34 | |
| 47 | |
| 95 | |
| 113 | |
| 174 | |
| 186 | |

- பாடப்புத்தகத்தில் 89, 90 ஆம் பக்கங்களிலுள்ள உதாரணங்கள் 1, 2, 3 ஐச் சரியாக விளங்கிக் கொள்க.

கீழுள்ள கட்டம் A இலுள்ள எண்களை கிட்டிய பத்தின் மடங்கிற்கு மட்டந்தட்டும் போது விடையாக 50 கிடைக்கும் எண்களைத் தெரிவு செய்து கட்டம் B இனுள் எழுதுக.

| **எண்கள்** |
|---|
| 43, 45, 47, 44, 48, 49, 51, 57, 53, 41, 52, 54, 58, 52, 54, 58, 59, 42 |

A

| **மட்டந்தட்டும் போது விடை 50 கிடைக்கும் எண்கள்** |
|---|
| |

B

- பாடப்புத்தகத்தில் 90, 91 ஆம் பக்கங்களிலுள்ள பயிற்சி 6.2 இற்கு விடையளிக்க.

- பாடப்புத்தகத்தில் 92 ஆம் பக்கத்தைப் பார்க்க. அங்கு தரப்பட்டுள்ள பலவினப் பயிற்சிற்கு விடையளிக்க. விடையளிக்கும் போது ஏற்படும் சந்தேகங்களை உங்களது ஆசிரியருடன்/ ஆசிரியையுடன் கலந்துரையாடி தீர்த்துக்கொள்க.